செய்தி வெளியீடு எண்: 497

# செய்தி வெளியீடு - 30.6.2008

அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் ஜூலை 15ஆம் தேதி முதல் தஞ்சாவூரிலும்; படிப்படியாக ஆகஸ்டு 15ஆம் தேதி முதல் கோவை, வேலூர் மற்றும் நெல்லையிலும்; செப்டம்பர் 15ஆம் தேதி முதல் சென்னையிலும் கேபிள் இணைப்பு வழங்கும் பணிகளை தொடங்கிடும் என்று நேற்று செய்தி வெளியீட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. இன்றைய நாளேடு (தினகரன்) ஒன்றில் "மதுரையைப் பற்றி அறிவிப்பு இல்லை" என்று உள்நோக்கத்தோடு விஷமத்தனமாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் தஞ்சை, கோவை, வேலூர், நெல்லை, சென்னை ஆகிய இடங்களில் டிஜிட்டல் ஹெட் எண்ட் சம்பந்தப்பட்ட உபகரணங்களை நிறுவி கட்டுப்பாட்டு மையங்களை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. நெல்லையில் நிறுவப்படும் கட்டுப்பாட்டு மையம் திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, தேனி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் கேபிள் இணைப்பு சேவைகளுக்கானது. ஒவ்வொரு கட்டுப்பாட்டு மையமும் எந்தெந்த மாவட்டங்களுக்கானது என்று ஏற்கனவே மூன்று முறை அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் சார்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டம் நெல்லை கட்டுப்பாட்டு மையத்தின் கீழ் வரும். உண்மை இவ்வாறு இருக்கையில், மதுரையைப் பற்றி அறிவிப்பு இல்லை என்று செய்தி வெளியிடுவது திசைதிருப்பக் கூடிய செயலாகும்.

* * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.